தொகுதி - XV1 நவம்பர் - 2016 இதழ் - 3

# சிந்தனை

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

தொகுதி - XVI கார்த்திகை- 2016 இதழ் - 3

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
2017

Refereed journal

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.



| | |
|---|---|
| **Editor** | Professor Selliah Krishnarajah |
| **Associate Editor** | Dr. K.Kajavinthan |
| **Managing Editor** | Dr. S. Santhirasegaram |
| **Editorial Committee Members** | Dr. K.Shriganeshan<br>Dr. K.Arunthavarajah<br>Dr. (Mrs) J. Rasanayagam<br>..................<br>Mr. R. Rajeshkannan<br>Mrs. S. Arulanantham<br>Mrs. S. Prabaharan |



| | |
|---|---|
| **Annual Subscription** | 1500/- SLR / 15US $ |
| Price Per Copy | 500/-SLR |
| **Published by** | The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| **Printed by** | Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna. |
| **ISSN** | **2478 - 1061** |

# பெருங்கற்காலப் பண்பாடும் பழந் தமிழ் இலக்கியங்களும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

சிவரூபி சசிதரன்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழக வரலாறு பொதுவாக சங்ககாலத்தை மையமாக வைத்தே நோக்கப்படுகின்றது. கி.மு 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதென பெரும்பாலும் காலவரையறைக்கு உட்படுத்தப்பட்ட சங்ககாலத்தில் எழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களே சங்க இலக்கியங்களாகும். இந்திய வரலாறானது பிரித்தானியர் ஆட்சியில் மீள்வாசிப்பிற்க்கு உட்படுத்தப்பட்ட போது தமிழ்நாட்டு நாகரிக வரலாற்றை வெளிப்படுத்த உதவிய அடிப்படை மூலதாரமாகச் சங்க இலக்கியங்கள் விளங்கின. அதனால் அன்று தொட்டு தற்காலம் வரை தமிழர் நாகரிகத்தின் தொடக்க வாயிலாக சங்ககாலமும் சங்கஇலக்கியமும் பார்க்கப்பட்டு வந்தது. இவ்விலக்கியங்கள் ஏற்படுத்திய செல்வாக்கின் காரணமாகவே தமிழக வரலாறானது சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம், சங்ககாலம், சங்க மருவிய காலம் என சங்க இலக்கியத்தை முன்னிறுத்தியே பெரும்பாலும் நோக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் தற்காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் பன்முகத் தன்மை கொண்ட ஆய்வுத் துறை வளர்ச்சி காரணமாக தமிழகப் பண்பாடு பற்றி அறிந்து கொள்ள உதவும் முதன்மை ஆதாரமாக சங்க இலக்கியத்தை கொள்வது எந்தளவிற்கு பொருத்தமானதாகும் என்ற கேள்வியை உருவாக்கியுள்ளது. சங்க இலக்கியங்கள் தொடர்பாக தோன்றியுள்ள கருத்து முரண்பாடுகள் குறிப்பாக இவை தோற்றம் பெற்ற காலம், தொகுக்கப்பட்ட காலம், தொகுக்கப்பட்ட முறை, தொகுக்கப்பட்ட காலத்து சமூக பின்னனி என்பவற்றின் காரணமாக முழுமையான சமூகக்கட்டமைப்பொன்றினை புலப்படுத்தி நிற்கின்றது என கூறமுடியாதுள்ளது. அத்துடன் சங்க இலக்கியத்தையும் அது தோன்றுவதற்கு பின்னனியாக இருந்த பெருங்கற்காலப் பண்பாட்டினையும் ஒப்பிட்டு நோக்கும் போது பெருங்கற்கால பண்பாட்டு முதிர்ச்சி நிலை அம்சங்கள் பலவற்றையே நாம் சங்க இலக்கியங்களூடாக கண்டு கொள்ள முடிகின்றது. இவ்வகையில் இவ்வாய்வின் நோக்கங்களாக பின்வருவன அமைகின்றன.

- தமிழக வரலாறு சங்ககாலத்தை மையமாக வைத்தே தொடங்கப்படுகின்றது. இவ் வரலாற்றுக்கால உருவாக்கத்திற்கும் அக்கால இலக்கியங்கள் தோற்றம் பெறவும் காரணமாக இருந்த ஓர் சமுதாய அமைப்பை தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்வதும்,
- இவற்றினூடாக கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலம் தொட்டு தொடர்ச்சியாக இற்றைவரை ஓர் சமுதாய தொடர்ச்சியினையும், பண்பாட்டு மாறுதல்களையும் ஆராய்வதும்,
- சங்கஇலக்கியங்கள் தொடர்பாக தோன்றியுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக தொல்லியல் இலக்கியச் சான்றுகள் அனைத்தையும் ஒன்றினைத்து நோக்குவதன் மூலம் சங்ககால சமூகத்தின் பல்வேறு பட்ட தரவுகளை முழுமையாக ஆராய்வதும்,
- பெருங்கற்காலப் பண்பாட்டின் இறுதிக்காலகட்டத்திலேயே சங்க இலக்கியங்கள் தோற்றம் பெற்றதெனலாம். இதனால் பழந்தமிழ் இலக்கியங்களான சங்கஇலக்கியங்களினை பெருங்கற்கால தொல்லியல் ஆய்வுகளுடன் இணைத்துகுறிப்பாக அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு பின்னனியில் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள் :** பெருங்கற்காலம், சங்ககாலம், பழந் தமிழ் இலக்கியங்கள்,தமிழகம், தொல்லியல் ஆய்வுகள், ஈமச்சின்னங்கள்.

**அறிமுகம்**

தமிழக வரலாறு பொதுவாக சங்ககாலத்தை மையமாக வைத்தே நோக்கப்படுகின்றது. கி.மு 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதென பெரும்பாலும் காலவரையறைக்கு உட்படுத்தப்பட்ட சங்ககாலத்தில் எழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களே சங்க இலக்கியங்களாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் என்ற வரிசையில் காலத்தால் முற்பட்டவையும் சங்க இலக்கியங்களேயாகும். இவற்றுள் கலித்தொகை, பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படை நீங்கலாக ஏறத்தாழ கி.மு 200 – கி.பி 250, 300 வரையானதாகும். மற்றும் தொல்காப்பியம் (குறிப்பாக பொருளதிகாரம்), திருக்குறள், கலித்தொகை, பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படை ஏறத்தாழ கி.பி 300 – கி.பி 400 வரையானதாகும். சங்க இலக்கியங்கள் அவற்றின் முக்கியத்துவம் காரணமாக தமிழக வரலாற்று உருவாக்கத்திற்கு வித்திட்ட முறையினை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். பெருங்கற்காலப் பண்பாட்டின் இறுதிக்காலகட்டத்திலேயே சங்கஇலக்கியங்கள் தோற்றம் பெற்றதெனலாம். இவ்விலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே தமிழக வரலாறு தொடங்கப்படுகின்றது.

இந்திய வரலாறானது பிரித்தானியர் ஆட்சியில் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்ட போது தமிழ்நாட்டு நாகரிக வரலாற்றை வெளிப்படுத்த உதவிய அடிப்படை மூலதாரமாகச் சங்க இலக்கியங்கள் விளங்கின. அதனால் அன்று தொட்டு தற்காலம் வரை தமிழர் நாகரிகத்தின் தொடக்கவாயிலாக சங்ககாலமும் சங்கஇலக்கியமும் பார்க்கப்பட்டு வந்தது. இவ்விலக்கியங்கள் ஏற்படுத்திய செல்வாக்கின் காரணமாகவே தமிழக வரலாறானது சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம், சங்ககாலம், சங்க மருவிய காலம் என சங்க இலக்கியத்தினை முதன்மைப்படுத்திய வகையிலேயே ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. உதாரணமாக நீலகண்ட சாஸ்திரி தமிழக வரலாற்றிற்கு இவ்விலக்கிய ஆதாரங்களின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்தபோது பின்வருமாறு கூறுகின்றார்.

"சங்க இலக்கியங்கள் யதார்த்தமானவை. முதற் கணிப்பிலேயே நம்பத்தக்கவை. பிற்பட்டுத் தோன்றிய இலக்கியங்களைப் போல அளவுக்கதிகமாகப் புகழ்ந்து பேசாது அத்தன்மை காரணமாகவே தம் தரத்தைத் தக்கவைத்துக் கொள்வன. அவ்விலக்கியங்களின் சமயச்சார்பற்ற தன்மை பலராலும் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. தன்னை அவ்வாறே வெளிக்காட்டிக்கொள்ளும் அவ்விலக்கியம் தமிழர்களது தொடக்க கால வரலாற்றிற்கு அடிப்படையான மூலதாரமாக விளங்குகின்றது" (கா.சிவத்தம்பி.2003).

தமிழக வரலாறு சங்க இலக்கியத்தை முன்னிறுத்தியே பெரும்பாலும் நோக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் தற்காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் பன்முகத்தன்மை கொண்ட ஆய்வுத் துறை வளர்ச்சி காரணமாக தமிழகப் பண்பாடு பற்றி அறிந்து கொள்ள உதவும் முதன்மை ஆதாரமாக சங்க இலக்கியத்தை கொள்வது எந்தளவிற்கு பொருத்தமானதாகும் என்ற கேள்வியை உருவாக்கியுள்ளது. சங்க இலக்கியங்கள் தொடர்பாக தோன்றியுள்ள கருத்து முரண்பாடுகள் குறிப்பாக இவை தோற்றம் பெற்ற காலம், தொகுக்கப்பட்ட காலம், தொகுக்கப்பட்ட முறை, தொகுக்கப்பட்ட காலத்து சமூக பின்னணி என்பவற்றின் காரணமாக முழுமையான சமூகக்கட்டமைப்பொன்றினை புலப்படுத்தி நிற்கின்றது என கூறமுடியாது. குறிப்பாக சங்க இலக்கியங்களில் தமிழர் கடல் கடந்து வணிகம் செய்தமை பற்றிய செய்திகளையே, சமணசமயம் பற்றிய செய்திகளையே, தமிழரது வரிவடிவம் பற்றிய கருத்துக்களையே, அக்கால மன்னர் வெளியிட்ட நாணயம் பற்றிய செய்திகளையே

குறிப்பிடத்தக்களவில் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒப்பீட்டளவில் நோக்கும் போது இவை பற்றிய செய்திகளை தொல்லியல் சான்றுகள் அதிகளவில் வெளிப்படுத்துவதனை காணமுடிகின்றது. எனவே சங்ககால சமூகத்தின் பன்முகத்தன்மையினை புரிந்து கொள்வதற்கு இலக்கியம், பிராமிக் கல்வெட்டு, நாணயம், வெளிநாட்டார் குறிப்புகள் மற்றும் தொல்லியல் சான்றுகளையும் ஒன்றிணைத்து பார்ப்பதன் மூலமே சாத்தியமாகும். இந் நோக்கில் சமகால அறிஞர்கள் பலரும் ஆய்வில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் இவ் சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக்காலம் தோற்றம் பெறுவதற்கு முற்பட்ட கால சமூகத்தின் தோற்றம் பற்றியும், அக்கால இலக்கியங்கள் தோற்றம் பெற காரணமாக இருந்த ஒர் சமுதாய அமைப்பினையும், அவற்றின் வளர்ச்சி நிலை பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகின்றது. இதனூடாக கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலம் தொட்டு தொடர்ச்சியாக இற்றை வரை ஒர் சமுதாய தொடர்ச்சியினையும், பண்பாட்டு மாறுதல்களையும் ஆராய முடிகின்றது. தமிழக பண்பாட்டு வரலாற்றின் தொடக்கமாக சங்க காலத்தை கணிப்பதற்கு இக்காலத்தில் வளமான மொழி எழுத்து, இலக்கியம், கலை, பொருளாதாரம் போன்றவை நன்கு செழிப்புற்றிருந்தமையே காரணமாகும். ஆயினும்இக்காலத்திற்குமுன்னரேதமிழகத்தில் தொன்மையான பண்பாட்டம்சங்கள் தோன்றி வளர்ந்திருந்ததனை இங்கு மேற் கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் சான்றுகள் பலவும் சுட்டிகாட்டுகின்றன. இப் பண்பாட்டம்சங்களே பெருங்கற்காலப் பண்பாடு (Megalithic Culture) எனப் பெயர் பெறுகின்றது.

**பெருங்கற்காலப் பண்பாடு** (Megalithic Culture)

மனிதன் நாடோடி வாழ்க்கை முறையினை கைவிட்டு நிரந்தரமான வாழ்க்கை முறைக்கு பொருத்தமான இடங்களில் நிரந்தர குடியிருப்புக்களை அமைத்து ஒரு சமூகமாக செறிந்து வாழத் தொடங்கியமை, தமது இருப்பிடங்களுக்கு அண்மையில் குளநீர்ப்பாசன விவசாயம் செய்ய தொடங்கியமை, மந்தைவளர்ப்பில் ஈடுபடத் தொடங்கியமை, மற்றும் சிறுதொழில் நுட்ப வளர்ச்சி, ஈமச்சின்ன அமைப்பு முறைகள், மட்பாண்டங்களின் உற்பத்தி, உலோகத் தொழில்நுட்பம், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டான். உலகில் இந்த மாற்றங்கள் வெவ்வேறு பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் தமிழகத்திலும், இலங்கையிலும் இப்பண்பாட்டு மாற்றம் பெருங்கற்காலப் பண்பாடு என அழைக்கப்படுகின்றது. இதுவரை கிடைக்கப் பெற்ற சான்றாதாரங்களின் அடிப்படையில் பெருங்கற்காலப் பண்பாடானது தென்னிந்தியாவில் கி.மு 1200 தொடக்கம் கி.மு 300 வரையிலும், இலங்கையில் கி.மு 1000 தொடக்கம் கி.மு 300 வரையிலும் நிலவியிருந்தது. தொல்லியாளர்கள் பலரின் கருத்துப் படி இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றமானது தென்னிந்திய பெருங்கற்காலப் பண்பாட்டுடனேயே தொடர்புபடுத்தப்படுகின்றது. இப் பெருங்கற்கால மையங்களாக தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொற்கை, பெருமான்மலை, பாண்டிச்சேரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மாங்குடி, காரூர் போன்றனவும், இலங்கையில் அநுராதபுரம், பொம்பரிப்பு, கரம்பன்குளம், கதிரவெளி, திசமகாரம, கந்தரோடை, கிளிநொச்சி, ஆனைக்கோட்டை, சந்திராந்தை போன்றனவும் சிறப்பு பெற்ற மையங்களாகும்.

இப் பண்பாட்டின் முதன்மையான அம்சங்களில் சில தென்னிந்தியாவில் இதற்கு முன்னர் நிலவிய புதியகற் காலப்பண்பாட்டுடன் (Neolithic Culture) தோற்றம் பெற்றிருந்தாலும் அதன் வளர்ச்சி நிலையினை பெருங்கற்காலத்திலேயே

காணமுடிகின்றது. தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாட்டின் ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட எச்சங்கள் குறிப்பாக தாழி அடக்கம், நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் மரபு, இவ் ஈமக் குழிகளில் ஞாபகச் சின்னமாக நடப்பட்ட கற்கள் இவற்றுடன் காணப்பட்ட கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பன பெருங்கற்காலம் புதிய கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சியே என்பதனை எடுத்துக்காட்டியுள்ளன. எனினும் பெருங்கற்காலமானது இங்கு புதிய பண்பாட்டு வளர்ச்சி நிலையினை குறித்து நிற்கின்றது. புதிய கற்காலத்தில் தமது வசிப்பிடத்திலேயே இறந்தோரை அடக்கம் செய்த மக்கள் பெருங்கற்காலத்தில் தம் வசிப்பிடங்களுக்கு அப்பால் பெரிய கற்களை பயன்படுத்தி இறந்தோரை அடக்கம் செய்தனர். அத்துடன் தாழிஅடக்கம், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் போன்ற புதிய கற்கால ஈமச்சின்ன வழக்கங்களோடு பெரிய கற்களை கொண்டு அமைக்கப்பட்ட கற்பதுக்கை, கல்வட்டங்கள் போன்றனவும் அமைக்கப்பட்டன. அதாவது பெருங்கற்காலத்தின் பிரதான அம்சங்களாகிய மக்கள் இருப்பிடங்கள், இடுகாடுகள், குளங்கள், வயல்கள் போன்றவையெல்லாம் பெருங்கற்காலத்தின் தனித்துவமான வளர்ச்சியினையே சுட்டுகின்றது எனலாம் (சி.க.சிற்றம்பலம் 2002). இப் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தான் சங்காலப் பண்பாட்டு அம்சங்கள் தோன்றியிருந்ததனை சங்க இலக்கியச் சான்றுகள் பலவும் சுட்டிக்காட்டுகின்றன.

பெருங்கற்காலப் பண்பாட்டில் பெரிய பெரிய கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கான ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டமையால் இக்காலம் பெருங்கற்காலம் எனப் பெயர் பெற்றதுடன் கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்களின் அதிகரித்த பாவனை மற்றும் இரும்பாயுதங்களின் பாவனை போன்றவை காரணமாக கறுப்புசிவப்பு நிற மட்பாண்ட காலம் மற்றும் இரும்புக்காலம் என்றும் இக்காலம் பெயர் பெறுகின்றது. இவ் முக்கிய அம்சங்களான ஈமச்சின்ன அமைப்பு முறைகள், தாழியடக்க முறைகள், மட்பாண்ட உற்பத்தி மற்றும் இரும்பாயுத உற்பத்தி போன்றவை பற்றிய செய்திகள் பலவும் சங்க இலக்கியங்களில் பரவலாக கூறப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு சங்க இலக்கியங்களில் பாடல் வடிவில் விளக்கப்பட்டிருக்கும் இவ் பண்பாட்டம்சங்கள் வரலாற்றுக் காலமான சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த நிலையினையே சுட்டுகின்றதெனலாம். இந்த வகையில் நோக்கும் போது எந்தவொரு பண்பாடும் திடீரென தோற்றம் பெற்று வளர்ச்சி நிலையினை பெற்றிருக்க முடியாது அவை படிப்படியாகவே அத்தகையதோர் நிலையினை எய்திருக்க முடியும் ஆகையால் வரலாற்று உதயகாலமாக நோக்கப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களே படிப்படியான வளர்ச்சியினை பெற்று வரலாற்றுக்காலமான சங்ககாலத்தில் சிறப்பு நிலையினைஎய்திருக்க முடியும். இதனையே தமிழகத்தின்சமகால தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகளும் வெளிப்படுத்துகின்றன.

**பெருங்கற்கால ஈமச்சின்ன அமைப்புகளும் சங்க இலக்கியங்களும்**

பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் இறந்தவர்களுக்கான ஈமச்சின்னங்களின் அமைப்பில் அதிக தொழில்நுட்பத்தை பயன்படுத்தியிருந்தனர். இதனை கற்களையும், தாழிகளையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஈமச்சின்ன அமைப்பு முறையில் எளிதில் கண்டுகொள்ள முடிகின்றது. பெரிய பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டமையால் இப் பண்பாடு பெருங்கற்காலப் பண்பாடு எனத் தொல்லியலாளரால் அழைக்கப்படுகின்றது. தமிழகத்திலும் ஈழத்திலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் பெருங்கற்களால் அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களும், முதுமக்கள் தாழிகளும், ஈமப்பேழைகளும் பரவலாக கிடைத்திருப்பதனைக் கொண்டும் பழந்தமிழ்

இலக்கியங்களாகிய சங்கஇலக்கியம் மற்றும் சங்க இலக்கியங்களுக்கு சற்றுப் பிற்பட்ட மணிமேகலை பாடல் வரிகள் மூலமும் பல்வேறுபட்ட ஈமச்சின்ன முறைகளினை தெளிவாக நோக்கமுடிகின்றது.

"சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர் "
(மணிமேகலை 6.111.11.6667)

என்ற மணிமேகலை வரிகள் சுடுபவர் களையும் - Cremation, இறந்த வர்களை ஓரிடத்தில் வைத்தல் - (Post – excarnation burial) குழியில் இடுதல் - Pit – burial, நிலத்துக்கடியில் கல்லறை அமைத்து வைத்தல் - (Rock – cut chamber or cist burial), தாழிகள் இட்டு அதன் மேல் மூடி கொண்டு மூடுதல் - (Urn burial encapped with lid) என ஐந்து முறைகளினையும், புறநானூற்றுப் பாடலடியென்று

"இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படு வழிப்படுக" (புறம் 239:2021)

என இடுக என்பதனூடாக இறந்தவர்களை ஓரிடத்தில் இடுவதையும் (exposure)இ சுடுக என்பதில் எரிக்கப்படுவதனையும் (Cremation), படுவழிப்படுக என்பதனூடாக இறந்தோரை நேரடியாக ஈமக்குழியில் வைப்பதனையும் குறிப்பிடுகின்றது.

பெருங்கற்கால ஈமச்சின்ன அமைப்பு முறைகளில் முதுமக்கட்தாழி அமைப்பு முறையானது செல்வாக்குப் பெற்ற ஈமச்சின்னமாகும். பெருங்கற்காலப் பண்பாட்டில் ஒருவர் இறந்ததும் அவரது உடலை குடியிருப்புக்கு வெளியே புறம்போக்கான ஒர் இடத்தில் உடலின் முக்கிய பாகங்களை நிவேதனப் பொருட்களுடன் தாழியில் இட்டு நிலத்தில் புதைக்கும் மரபு பரவலாக காணப்பட்டதனை தொல்லியல் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. தென்னிந்தியாவில் பரவலாக தாழியடக்க மையங்கள் அடையாளப்படுத்தப்பட்ட போதும் இந்தியாவின் மிகப் பெரிய தாழிக்காடாக (116 ஏக்கர்) தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் சிறப்பு பெறுகின்றது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தாழிகள் 01 மீற்றர் வரை உயரமானவை. அத்துடன் இவ் தாழிகளை மூடுவதற்கு மூடிகளும் பயன்படுத்தப்பட்டிருந்தன. தாழிகளுடன் கறுப்பு சிவப்பு, கறுப்பு, சிவப்பு நிறத்திலமைந்த, பல்வேறு வடிவிலமைந்த நிவேதனப் பொருட்களை வைக்கும் மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் வெண்கலம், இரும்பிலமைந்த கருவிகளும், வெண்கலத்திலான சிற்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறே தாழியடக்க முறையும் நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் முறையும் இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை போன்ற இடங்களிலும் பரவலாக காணமுடிகின்றது.

தென்னிந்திய, தமிழகத்தினைப் போன்றே இலங்கையிலும் தாழியடக்க, நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் மரபு சிறப்பு பெற்றதனை பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, மாந்தை போன்றஇடங்களில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.



கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருக்கப்பாரந்தனில் கிடைத்த தாழியின் உடைந்த பாகங்கள் தற்போது யாழ்ப்பாண நூதனசாலையில்

பொம்பரிப்பில் 1924 தொடக்கம் 1970 வரை கோகாட், கொட்றிங்ரன், முதலியோரும், இலங்கைத் தொல்லியல் திணைக்களமும் இப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலமாக

பல்வேறு தாழிகள் வெளிக்கொணரப்பட்டமை (03- 04 ஏக்கரில்) குறிப்பிடத்தக்கதாகும். பொம்பரிப்பில் வெளிக்கொணரப்பட்ட தாழிகள் தோற்றமைப்பில் ஆதிச்சநல்லூரில் காணப்பட்ட தாழிகளோடு ஒத்து காணப்படுகின்றன. நிலத்திலிருந்து அரை மீற்றர் ஆழத்தில் புதைக்கப்பட்ட இத் தாழிகளில் இறந்தோரின் முக்கிய எலும்புகளும் எலும்புக் கூடுகளும், அவற்றுடன் கிடைக்கப்பெற்ற ஏனைய சான்றுகளும் அப் பண்பாட்டு சிறப்பினை புலப்படுத்துகின்றன. குறிப்பாக ஆனைக் கோட்டையில் கிடைக்கப் பெற்ற " கோவேத" என பெயர் பொறிக்கப்பட்ட முத்திரைச் சாசனம் சிறப்பு வாய்ந்ததாகும்.

இவ்வாறாக பெருங்கற்காலத்தில் சிறப்பு பெற்ற முதுமக்கட் தாழி அமைப்பு முறையின் தொடர்சியான வளர்ச்சியினை பழந்தமிழரின் அடக்க முறைகளில் ஒன்றாகபழந்தமிழ் இலக்கியங்கள் விபரிப்பதனைக் கண்டு கொள்ள முடிகின்றது. சங்கப் பாடல்கள் முதுமக்கட் தாழி அமைப்பு பற்றி குறிப்பிடும் போது அரசன் தொட்டு சாதாரண மக்கள் வரை இயற்கையாய் இறந்து பட்டவர்களுக்கு அமைக்கப்பட்டதனைக் குறிப்பிடுகின்றது.



சில சமயங்களில் அரசர் தம் உயிருடன் இருக்கும் போதோ தாழிகள் செய்யப்பட்டதற்கும் சங்கப்பாடல்களில் சான்றுகள் காணப்படுகின்றன. குறிப்பாக சங்க இலக்கியங்களில் காலத்தால் முந்திய புறநானூறு மற்றும் நற்றினை தாழியடக்க முறை பற்றி குறிப்பிடும் போது,

1. "………. நெடுமாளவன்
தேவருலக மெய்தின னாதலின்
அன்னோற் கவிக்குங் கண்ணகன்றாழி"
2. "நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானாத்
தூழிய பெருங் காடெய்திய ஞான்றே"

(புற.பாடல் 228, 364)

எனவும், பெண்களையும் தாழிகளில் இட்டு புதைத்தனர் என்பதனை தும்பிசேர் கீரனார் புறப்பாடலில் குறிப்பிடும் போது,

"கலஞ் செய் கோவே கலஞ் செய் கோவே
அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய
……………………………வீமத்தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூ ர்க் கலஞ் செய் கோவே"

(புற.பாடல் 256)

எனவும், செந்நிறத் தாழிகள் புதைக்கப்பட்ட இடத்தில் மேல் குவியலாக பரல்கள் இட்டு மூடப்பட்டிருந்ததனை பெருஞ்சித்திரனார் தமது புறப்பாடலில் குறிப்பிடும் போது,

"கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த
செவிசெஞ் சேவலும் பொருவலும் வெருவா
வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்
போய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடு முன் னின்னே கட்கா முறுநன்…"


( புறம் 238).

மற்றும் தாம் பெற்ற மகள் உடன்போனதை எண்ணி வருந்திய தாய்


"மாயிருந் தாழி கவிப்பத்
தாவின்று கழிக எற் கொள்ளாக் கூற்றே.."

(நற்றினை பாடல் 271)

எனப் பாடும் நற்றினைப் பாடலிலும் தமிழகத்தில் நிலவிய தாழியடக்க முறைபற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. இங்கு "தாழிகவிப்ப" எனும் சொற்பதமானது தாழிகள் மூடிகள் கொண்டு மூடப்பட்டதனை குறிப்பிடுகின்றது.



தாழிகள் மூடப்பட்ட சட்டிகள்



அலங்கார வேலைப்பாடுள்ள தாழி (பொம்பரிப்பு)

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது பெரும்பான்மை யான தாழிகள் கறுப்பு நிற பானைகளாகவும் மூடிகள் கொண்டு மூடப்பட்டிருந்ததனையும் அவதானிக்க முடிகின்றது.

பெருங்கற்கதால ஈமச்சின்ன அமைப்பு முறைகளில் சிறப்பு பெற்ற கற்பதுக்கை பற்றியும் சங்க இலக்கியங்கள் பரவலாக குறிப்பிடுகின்றது. தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்லால் அமைக்கப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டு ஈமச்சின்னங்கள் மற்றும் சங்க இலக்கியங்களில் அடிப்படை யிலும் பெருங்கற்படைச் சின்னங்கள் அதன் வளர்ச்சி நிலையில் வீரக்கல்லாக அல்லது நடுகற்களாக மாற்றம் பெற்றிருப்பதனை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் கா.ராஜன் நான்கு நிலைகளில் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அதாவது முதலாவது நிலையில் அகழ்வாய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்பட்ட பெருங் கற்கால ஈமச்சின்ன அமைப்பு முறைகளில் ஒன்றாகிய கற்பதுக்கையினை (cist) காலத்தால் முந்தியதாகவும்(கி.மு 3ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்) இரண்டாவதாக பெருங்கற்கால ஈமச்சின்ன அமைப்பான கற்பதுக்கையை சுற்றி நெடுங்கற்கள் (menhir) அமைக்கப்பட்டதனையும், முன்றாவதாக பெருங்கற்கால ஈமச்சின்ன இறுதிக் கூறாகிய கற்பதுக்கையை தவிர்த்த நிலையில் (கி.பி 1-2 நூற்றாண்டு) நெடுங்கல் அமைப்பினையும் (menhir), இறுதியாக நெடுங்கற்கள் அளவில் சிறுதாகி நடுகற்களாக (கி.பி 2-3 ஆம் நூற்றாண்டு) மாறியதனையும் குறிப்பிடுகின்றார் (கா.ராஜன்: 2012).

இவ்பெருங்கற்காலபண்பாட்டுகல்லாலான ஈமச்சின்ன அமைப்பு முறைகளின் படிமுறை ரீதியான வளர்ச்சியினை சங்கப் பாடல்களின் ஊடாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. காலத்தால் முற்பட்டதான பதுக்கையானது போரில் இறந்துபட்ட வீரர்களின் உடல்களை கற்களால் ஆன பதுக்கை வைத்து மேலே கற்குவியல்களால் மூடிவைக்கப்பட்ட செய்தியை விளக்கி நிற்கின்றது.

"வில்லிட வீழ்ந்தோர் பதுக்கை.." (அகம் : 157.5).

"ஆள் அழித்து உயர்ந்த அஞ்சுவரு பதுக்கை..." (அகம்: 215.11).

"அம்பின் விசை இட வீழ்ந்தோர் எண்ணு வரம்பு அறிய உவல் இடு பதுக்கை ." (அகம் 109)

"படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை..." (அகம்: 231.6).

இரண்டாவது நிலையில் பெரும்பாலும் தொறுப்பூசலில் இறந்து பட்ட வீரருக்கு கற்பதுக்கை அமைத்து சுற்றி எழுப்பப்பட்ட நெடுங்கல் அமைப்பு பற்றி சங்கப் பாடல்

"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி....
பெயர் பொறித்து இனி நட்டனரே.
கல்லும் கன்றொடு கறவை தந்து
பகைவர் ஒட்டிய நெடுந்தகை" (புறம்:264).

"நாணுடை மறவர் பெயரும் பீடும் எழுதி அதர் தொரும் பீலி
சூட்டிய பிறங்கு நிலை நடுகல்.....
நிரை கண்டண்ண உவல் இடு பதுக்கை.."
(அகம் 67)

குறிப்பிடுவதனைக் காணலாம். மூன்றாவாதாக "நட்ட போலும் நடாஅ நெடுங்கல்" (அகம் 269:7) என்ற பாடல் வரியானது கற்பதுக்கைகளை தவிர்த்து தொறுப்பூசலில் இறந்து பட்ட வீரர்களுக்கு அமைக்கப்பட்ட நெடுங்கல் ஈமச்சின்ன அமைப்பு முறையினையும் இறுதியானதாக"நடுகல் ஆயினன்" (புறம் 221),"எழுத்துடை நடுகல்","முதிர் நடுகல்" (அகம் 53, 297) என நடுகல் ஈமச்சின்ன அமைப்பு முறையினையும் கண்டு கொள்ள முடிகின்றது.

சங்கப்பாடல்கள் ஊடாக கல்லாலான ஈமச்சின்ன அமைப்பு முறைகளின் பல்வேறு கட்ட வளர்ச்சியினை உற்று நோக்கும் போது, சங்கப் பாடல்கள் பல நூற்றாண்டுகளின் தொகுப்பாக காணப்படுவதனை அல்லது சங்க இலக்கியங்களின் காலத்தை பின் னோக்கி பார்க்க வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளதுடன், பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்கள் பல நூற்றாண்டுகளை உள்ளடக்கியிருப்பதனாலும் ஈமச்சின்ன அமைப்புமுறைகள் கூட ஒரே தன்மையினதாக இல்லாமல் வேறுபட்டனவாகவும், பல்வேறு வளர்ச்சி நிலை கொண்டதாகவும் காணப்படுவதனையும் தமிழக பெருங்கற்கால அகழ்வாய்வுகள் புலப்படுத்துகின்றன.


ஈமச்சின்ன வகைகள் மட்டுமன்றி இவ்வீமச் சின்னங்கள் அமைக்கப்பட்ட இடங்கள் பற்றியும் சங்க இலக்கிய சான்றுகள் மூலம் கண்டு கொள்ள முடிகின்றது. சங்க இலக்கியத்தில் ஈமச்சின்னங்கள் இருந்த இடங்கள் இடுகாடு, முதுகாடு, புறங்காடு, சுடுகாடு, சிறுகாடு எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்டதனையும், இவ்விடங்கள் மக்கள் வாழாத புறம் போக்கான பயிர்ச் செய்கைக்கு உதவாத இடங்களில் இருந்ததனை அகநானூறு, புறநானூறு, நற்றினை போன்ற சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. குறிப்பாக "தாழிய பெருங்காடெய்திய ஞான்றே" (புறம்: 1168-13) என்ற பாடல் அடியினூடாக தாழிகள் புதைப்பதற்கு என்று தனியாகச் சுடுகாடு இருந்துள்ளதனையும், அச்சுடுகாடு பெருங்காடு என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளமையும் புலனாகின்றது. புறநானூற்றில்தாயங்கண்ணார் சுடுகாட்டைக் கருப் பொருளாக கொண்டு பாடும் பொழுது,

"களரி பரந்த கள்ளி போகிப்
பகலும் கூவும் கூகையொடு பிணம்பல்
ஏம விளக்கின் போய் மகளிரொடு
ஆஞ்சுவந் தன்று இம் மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீறு அவிப்ப
எல்லார் புறனும் தான்கண்டு உலகத்து
மணபுதைக் கெல்லாம் தானாய்த்
தன்புறம் காண் போர்க் காண்பு அறியாதே"

என சுடுகாடு களர் நிலமாக கள்ளிகள் நிறைந்த இடமாக கூறப்பட்டு ஒளியுடன் திகழ வேண்டிய அவ்விடம் இருள் சூழ்ந்து பகல் வேளையில் கூட கூவைகள் கூவ, பேய்கள் உலாவ, காதலர்கள் அழுது வடித்த கண்ணீர் சுடலையின் சாம்பலை அணைத்திட உலகத்து உயிர்களுக்கெல்லாம் முடிவான இடமாக சுடுகாடு வர்ணிக்கப்படுகின்றது.

இவ்வாறாக சங்க இலக்கியங்களில் மக்கள் குடியிருப்புக்கு அப்பால் பயிர்ச்செய்கைக்கு உதவாத இடங்களில் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதாக கூறும் செய்தியினை பெருங்கற்காலப் பண்பாட்டிலும் காண முடிகின்றது. புதிய கற்காலப் பண்பாட்டில் ஈமச்சின்னமும், குடியிருப்பும் ஒன்றாக காணப்பட பெருங்கற்காலப் பண்பாட்டில் குடியிருப்பிலிருந்து விலகி புறம்போக்கான இடங்களில் ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆகையால் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் ஈமச்சின்ன அமைவிடங்கள் பெருங்கற்கால ஈமச்சின்ன மரபையே பிரதிபலிக்கின்றன எனக் கூறுவதில் தவறில்லை.

**பெருங்கற்கால பண்பாட்டு அம்சங்களும் சங்க இலக்கியங்களும்**



ஈமச்சின்னங்கள், அதன் அமைவிடம் மட்டுமன்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மட்பாண்டங்கள் பற்றிய செய்திகளும் பெருங்கற்கால பண்பாட்டு அம்சங்களினை குறிப்பாக அதன் வளர்ச்சி நிலையினையும் சுட்டுகின்றது எனலாம். பெருங்கற்கால பண்பாட்டு மையங்கள் யாவற்றிலும் இனங்காணப்பட்ட தொல்லியல் எச்சங்களில் பொதுவானவை மட்பாண்டங்களாகும். இப் பண்பாட்டில் கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்களின் பாவனை அதிகரித்தமையால் இக் காலம் கறுப்பு சிவப்பு நிற மட்பாண்ட காலம் என மறு பெயர் பெறுகின்றது. மட்பாண்டங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டில் இறந்தவர்களை அடக்கம் செய்யவும் (ஈமத்தாழி), நிவேதனப் பொருட்களை வைப்பதற்கும் மற்றும் அன்றாடப் பாவனைப் பொருட்களாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவ் மட்பாண்டங்கள் பல்வேறு வடிவில் அமைந்தவையாய் குறிப்பாக கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள், உலை மூடிகள், மூடிகள், மட்பாண்டங்களை வைப்பதற்கான தாங்கிகள் என தமிழக, இலங்கை பெருங்கற்கால மையங்களில் பெருமளவில் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ் மையங்களில் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, பெம்பரிப்பு என்பன குறிப்பிடத்தக்க சில மையங்களாகும். பெருங்கற்கால மையங்கள் பலவற்றில் மட்பாண்டங்கள் மட்டுமன்றி மட்பாண்டங்களை வனைவதற்கான குயவ சக்கரங்கங்களும் தொல்லியல் ஆய்வுகளூடாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். எனினும் இங்கு கண்டுபிடிக்கப்பெற்றிருக்கும் மட்பாண்டங்கள் வைத்து நோக்கம் போது தொழில்நுட்ப ரீதியில் இவ் மட்பாண்டங்களை ஆக்குவோரின் ஆரம்ப கட்ட முயற்சியாகவே இவை காணப்படுகின்றன. இவ் பெருங்கற்கால மையங்களில் கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்கள் பல்வேறு வடிவிலானவை மட்டுமன்றி குறியீடுகள் மற்றும் பிராமி எழுத்துகளினையும் கொண்டிருப்பது சிறப்பான அம்சமாகும்.

இவ் பெருங்கற்கால மையங்களில் இனங்காணப்பட்ட மட்பாண்டங்கள் பற்றிய செய்தியினை அல்லது அவற்றின் வளர்ச்சி நிலையினை சங்க இலக்கிய பாடல்களினூடாகவும் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. மட்பாண்டத் தொழிலின் பழமையை எமக்கு உணர்த்தும் மிகத் தொன்மையான இலக்கிய ஆதாரமாகவும் இவ் சங்க இலக்கியங்கள் அமைகின்றன. சங்க இலக்கியங்களூடாக மட்பாண்ட செய்திகளினை நோக்கும் போது, “வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த” (புறம்:32.8) அதிகளவில் மட்பாண்டங்கள் செய்வதற்க்கு சக்கரங்கள் பயன்படுத்தப்பட்டதனை, “வனைகலம் திகிரியின் குமிழி சுழலும் துணைசெலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்” (மலைபடு:474.75) இங்கு நீரின்கட் சுழலுக்கு உவமையாகக் குயவன் மட்கலஞ் செய்யும் குயவ சக்கரத்தின் வேகம் (சுழற்சி) கூறப்படுகின்றது.

“இருள்திணிந் தன்ன குருஉத்திரள் பரூஉப்புகை
அகலிரு விசும்பின் ஊன்றுஞ் சூளை
நணந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே...”
(புறம்:228.2-4)

என மட்பாண்டங்களைச் சுடுவதற்கு என அமைக்கப்பட்ட பெரிய சூளைகளிலிருந்து பெருமளவில் புகை வெளியேற்றப்பட்டிருக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது.

“செந்தாழிக் குவிபுறத் திருந்த..”
(புறம்:238:1)
“பெருங்கட் குறுமுயல் கருங்கலன்..”
(புறம்:322:5)

என மட்பாண்டங்கள் செந்நிறமாகவும், கருநிறமாகவும் அமைக்கப்பட்டதனை அறிய முடிகின்றது. இவ் கறுப்பு சிவப்பு

நிற மட்பாண்டங்கள் பல்வேறு வடிவில், பல்வேறுபட்ட தேவைகளுக்காக அமைக்கப்பட்ட செய்திகளையும் கீழ்வரும் சங்கப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

1. குழிசி –மட்பானை

"முரவுவாய்க் குழிசி.."

(பெரும்:99)

"மான் தடி புழுக்கிய புலவு நூறு குழிசி.."

(புறம்:168.9)

2. சாடி - இறந்தவர்களை புதைப் பதற்கான மட்பாண்டம், மது அருந்தக் கூடிய மட்பாண்டம்

"நனை முதிர் சாடி" (புறம்:297:6)

"தொடுதல் ஓம்புமதி, முது கட் சாடி"

(புறம்:258.9)

3. கலன் - மட்பானை

"பெருங்கண் குறுமுயல் கருங்கலன்"

(புறம்:322.5)

4. கன்னல் - நீர் அருந்தும் மட்பாண்டம், மட்பானை

"கல்லென் துலவை தூவலின், யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்"

(நெடுநல்:64,65)

5. குடம் - மட்பானை, கள் நிரப்புவதற்கு பயன்படுத்தப்பட்டது.

"...திரள்கால் சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடம் தொலைச்சி, நாளும்"

(பெரும்பாண்:380 - 382)

6. தசும்பு – மட்பானை, தயிர் உறைய வைக்கப் பயன்படுத்தப்பட்டமை.

"சுடுமண் தசும்பின்" (நற்:84.6)

"தயிர்கொடு வந்த தசும்பு" (புறம்:33.3)

7. குதிர் - தானியங்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட மண்ணாலான சேமக்கலன்

"பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில்"

(பெரும்பாண்:186)

8. மடா–சமையல் செய்யப் பயன்படும் பெரிய மட்கலன்.

"அடைச் சேம்பு எழுத்த ஆடுறும் மடாவின்"

(பதி:24-24)

9. பிழா– அகன்ற வாயுடைய மட்கலன், அரிசியினால் கள் தயாரித்தோர் பயன்படுத்தினர்.

"அலையா அரிசி அம்களித் துழலை
மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றி"

(பெரும்பாண்:276)

10. மண்டை - உண்கலம்

"பரூஉக் கள் மண்டை யொடு, ஊழ் மாறு பெய்"

(புறம்:125.3)

"வண்டு படு நறலின் தண்டா மண்டையொடு"

(புறம்:261.2)

இவைமட்டுமன்றி இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மண்ணிலான தாழிகள் பற்றிய செய்திகளையும் பரவலாக சங்கப் பாடல்களில் காணமுடிகின்றது.

"வியல் மலர் அகன் பொழில் ஈமத் தாழி"

(புறம்:256.5)

"மா இருந் தாழி கவிப்பத்.."

(நற்:271.11)

"மன்னர் மறைத்த தாழி.."

(பதிற்றுப:142.22ஃ)

அக் காலத்தில் மட்பாண்டங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் பற்றிய செய்திகளினையும் கீழ் வரும் பாடல் வரிகள் ஊடாக அறிய முடிகின்றது.


"தாழிக் குவளை வாடுமலர் சூட்டி"

(அகம்:165.11)

தாழியும் மலர்பல அணியா.."


(அகம்:369:6)

இவ் சங்ககாலத்தில் மட்பாண்டத் தொழில் செய்வோனை கலஞ் செய்கோ, வேட் கோச்சிறார் என அழைக்கப் பட்டதுடன், குயவசக்கரத்தின் பாவனை மட்பாண்டங்கள் அமைப்பதற்காக உருவாக்கப்பட்ட பெரிய சூளைகள், மட்பாண்டங்களின் அலங்கார வேலைப்பாடுகள், ஈமத்தாழிகள் மற்றும் மக்களின் அன்றாடப் பாவனைக்களுக்காக தேவைக்கேற்ப பல்வேறு வடிவில் அமைக்கப்பட்ட மட்பாண்டங்கள் என்பன பற்றிய செய்திகளெல்லாம் சங்க இலக்கியங் களில் பரவலாக காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.



பல்வேறு தோற்றங்களிலமைந்த தாழிகள் (பொம்பரிப்பு)

இவ்வாறாக சங்க இலக்கியங்களில் வெளிப்படுத்தப் பெற்றிருக்கும் மட்பாண்டம் பற்றிய செய்திகளைஒத்த அல்லது ஆரம்பகட்ட வளர்ச்சியினை கொண்ட மட்பாண்டங்கள் பெருங்கற்கால மையங்களிலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பெருங்கற்கால பண்பாட்டில் மட்பாண டங்கள் பல்வேறு அளவுகளில், வடிவத்தில் அமைந்திருந்ததென்பதற்கு சிறந்த உதாரணங்களில் ஒன்றாகஇலங்கையின் முக்கிய பெருங்கற்கால சவ அடக்க மையமான பொம்பரிப்பில் கிடைக்கப்பெற்ற மட்பாண் டங்களை பேராசிரியர்.சி.க.சிற்றம்பலம் 10 வகைப்படுத்தி நோக்கியதனைக் குறிப்பிடலாம் (சி.க.சிற்றம்பலம்.2002). பொம்பரிப்பில் மட்டுமன்றி தமிழகத்தில் அரிக்கமேடு, ஆதிச்ச நல்லூர் போன்ற மையங்களிலும் இத்தகைய மட்பாண்டங்களை அடையாளம் காணமுடிகின்றது. இதனால் பெருங்கற்கால



பண்பாட்டின் பிரதான அம்சமாக காணப்படும் மட்பாண்டப் பாவனையானது பெருங்கற்காலப் பண்பாட்டினை தொடர்ந்து வளர்ச்சி பெற்ற சங்க காலப் பண்பாட்டிலும் சிறப்புற்று விளங்கியதிலிருந்து பண்டைய தமிழரின் நாகரிக தொன்மையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

பெருங்கற்கால பண்பாட்டம்சங்களில் ஒன்றாக அடுத்து முக்கியத்துவம் பெறுவது இரும்பாயுத உற்பத்தியாகும். இரும்பு தொழில்நுட்பம் சிறப்பு பெற்றிருந்தமையால் பெருங்கற்காலப் பண்பாடு இரும்புக்காலப் பண்பாடு எனவும் சிறப்பிக்கப்படுகின்றது. பெருங்கற்கால மையங்கள் பலவற்றிலும் இரும்பாயுதங்கள், இரும்பாலான கொழுக்கள், ஆணிகள், வேல் மற்றும் வெண்கல மைக்குச்சிகள், வெண்கல மணிகளினாலமைந்த கழுத்து மாலைகள், மோதிரங்கள், போன்றபல்வேறுபட்ட உலோக பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை அக்கால தொழில்நுட்பத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறாக பெருங்கற்காலப் பண்பாட்டில் சிறப்பு பெற்ற இரும்பின் உபயோகமானது சங்காலத்திலும் தொடர்ந்து செல்வாக்கு பெற்றிருந்ததனை கீழ்வரும் சங்கப்பாடல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

"பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குறும்பி கொண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும் நாடன்"
(அகம்:72)

என கொல்லன் உலைக்களத்தில் இரும்பை சம்மட்டியால் அடிக்கும் போது தீப்பொறி சிதறுவதனை மழைக்காலத்து இரவில் மின்மினி மொய்த்த புற்றினைக் கரடி ஒன்று அடித்து உடைக்க அப்பொழுது மின்மினிப் பூச்சிகள் சிதறி ஒடுவதனை உவமையாகப் கூறப்பட்டுள்ளது. "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே.." (புறநானூறு:312) என போர்ப்படைக்கு தேவையான வேல் முதலிய கருவிகளை ஆக்கிக் கொடுத்தல் கொல்லனின் தலையாய கடமையாக கூறப்படுகின்றது.

"ஏமுர்ப் பொதுவினைக் கோளூர் யாத்த
ஊலைவாங்கு மிதிதோல்"
(குறுந்தொகை:172:5-6)

என ஏழு ஊர்களில் உள்ள மக்களுக்கு செய்ய வேண்டிய பொதுவான கொற்றொழிலுக்கு ஓர்கொட்டில் இருந்ததனைக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியப் பாடல்களில் கொல்லனது உலைக்களக் காட்சி பல்லேறு நிலைகளில் உவமையாகக் காட்டப்பட்டுள்ளதுடன் "இரும்பு செய் விளக்கின்"– (நெடுநல்வடை :42), உழுகொழு, குயம் (அரிவாள்) – (நெடுநல்வாடை :117,29,242), யானைக் கொடுந்தொடி -(பெரும்:436), இரும்புத்தகடு - (பெரும் 222), கவைமுட்கருவி(குத்துக்கோல்), மத்திகை(சம்மட்டி) - (முல்லை:35,59), நிலம் அகழும் உளி, வளைவுக்கத்தி, தொடலைவாள் - (மது. 635, 636, 637), ஊசிகள் (அகம்.199), பெரிய கோடரியான நெடுங்கை நவியம் (புறம்.36-7), படைக் கருவிகள் நெடுவேல்- (புறம்.1801:3), (புறம்.312:3) போன்ற பல்வேறு வகையான இரும்பினாலான பொருட்கள் பாவனையில் இருந்ததனையும் சங்கப் பாடல்கள் யாவும் சுட்டுகின்றன. இவ்வாறாக பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகிய இரும்பின் உபயோகமானது அப் பண்பாட்டினைத் தொடர்ந்து வந்த சங்ககாலப் பண்பாட்டிலும் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்ததனை பெருங்கற்கால தொல்லியல் எச்சங்களை சங்கப்பாடல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது அறிந்து கொள்ள முடிகின்றது.

இப் பண்பாட்டு அம்சங்கள் மட்டுமன்றி தமிழகப் பண்பாடு பற்றி அறிய உதவும் முதன்மை இலக்கியமான சங்க இலக்கியங்கள் விபரித்துக் கூறும் தமிழர் நாகரிக உருவாக்கம் பற்றிய செய்திகள் பலவும் குறிப்பாக அரச உருவாக்கம், நிரந்தரப் பொருளாதார உற்பத்தி, எழுத்து, மதம், கலை, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் போன்ற பலவும் பெருங்கற்காலப் பண்பாட்டிலேயே தோற்றம் பெற்றிருந்ததனை தமிழக, இலங்கை பெருங்கற்கால மையங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பொம்பரிப்பு, கந்தரோடை போன்ற பெருங்கற்கால மையங்களில் கிடைக்கப்பெற்ற நெல் உமியின் படிவங்களும், பொம்பரிப்பு, பின்வேவ, திவுல்லேவ போன்ற இடங்களில் கிடைத்த கொழுவின் பகுதிகளும் நீர்ப்பாசன விவசாயம் இடம்பெற்றமையை உறுதிப்படுத்துகின்றது.

2. மாட்டின் எலும்புகள் அநுராதபுரம், ஆனைக்கோட்டை, கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்தமையும், மீன்பிடி ஊசிகள் பூநகரி, கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்தமையைக் கொண்டும் விவசாயத்துடன் வேட்டை ஆடுதல், மந்தை வளர்த்தல் மற்றும் கடலுணவுகளை பெற்றுக் கொண்டமையை அறியமுடிகின்றது.

3. தமிழகத்தைப்போன்று பொம்பரிப்பிற் கிடைத்துள்ள வெண்கல மைக்குச்சியிலுள்ள ஆடையின் படிவங்கள் போன்றவை இப் பண்பாட்டு மக்கள் நூல் நூற்று ஆடைகளைத் தயாரித்தமையை உறுதிப்படுத்துகின்றது.

4. பெருங்கற்கால மையங்கள் பலவற்றிலும் பொதுவாக கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு மட்பாண்டங்கள், நாணயங்கள் போன்ற சான்றுகள் வெளிநாட்டு தொடர்பினை உறுதிப்படுத்துகின்றன.

5. பல்வேறு வளைவுகளுடன் இறுதியில் திரட்சியான முனையுடைய காப்புக்கள், ஊசிகள், பல்வேறு வகையான மணிகள், மட்பாண்ட வேலைப்பாடுகள், சிற்பங்கள், வேல்வடிவங்கள் என்பன சிறுதொழில்நுட்ப வளர்ச்சி, சமய, கலையம்சங்களைப் பிரதிபலிக்கின்றது.

6. ஆனைக்கோட்டை முத்திரை போன்ற சான்றுகள் அரச உருவாக்கத்திற்கான அடித்தளத்தினை இட்டுள்ளமையைக் கண்டு கொள்ள முடிகின்றது.

தமிழக நாகரிகம் தோற்றம் பெற்றமைக்குரிய நிரந்தர பொருளாதாரம், நிரந்தர குடியிருப்பு, அரச உருவாக்கம், நகரமயமாக்கல், சிறு

தொழில்நுட்ப வளர்ச்சி, எழுத்தின் தோற்றம், குயவ சக்கரத்தின் பயன்பாடு, இரும்பின் உபயோகம், ஈமச்சின்ன அடக்க முறைகள் போன்றவை பற்றிய செய்திகளெல்லாம் சங்க இலக்கியத்தில் பரவலாக கூறப்பட்ட திலிருந்து சங்க காலத்துடனேயே தமிழர் நாகரிகம் தோற்றம் பெற்றதாக அறிஞர்கள் பலரும் குறிப்பிட்டிருந்தனர்.


பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கல்மணிகள்

இருப்பினும் சங்க இலக்கியத்தையும் அது தோன்றுவதற்கு பின்னனியாக இருந்த பெருங்கற்காலப் பண்பாடு பற்றியும் ஆய்வு செய்த செம்பகலஷ்மி, ராஜன் போன்ற தொல்லியாளர்கள் பலரும் சங்க இலக்கியம் கூறும் 50 வீதமான வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டை ஒட்டிய வரலாறாகவே அடையாளப்படுத்துகின்றனர். இதனால் சங்க இலக்கியத்தினை அடிப்படையாக கொண்டு தமிழர் நாகரிகத்தின் தோற்றம் தொடர்பாக கொடுக்கப்பட்ட காலவரையறையை மேலும் பின்நோக்கி பார்க்கப்பட வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. அத்துடன் சங்க இலக்கியப் பாடல்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் பலவற்றையும் குறிப்பாக பெருங்கற்காலப் பண்பாட்டினை அடையாளப்படுத்தும் அம்சங்களான ஈமச்சின்னங்கள், குடியிருப்புக்கள், வயல்கள், குளங்கள் மற்றும் இரும்பின் பாவனை, மட்பாண்ட உற்பத்தி போன்றவையெல்லாம் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களில் தொல்லியல் ஆய்வுகளினூடாக சிறப்பாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் சங்ககாலமும், சங்க இலக்கியங்களும் தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாக பெருங்கற்காலப் பண்பாடு அமைந்திருந்ததெனலாம். சுருங்க கூறின் வரலாற்று உதய காலமான பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலேயே வரலாற்றுக் காலமான சங்க காலமும் அக்கால இலக்கியங்களும் தோற்றம் பெற்றிருந்தது என்பது மறுக்க முடியாதாகும். இதனையே தற்கால பெருங்கற்கால பண்பாட்டு தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

**முடிவுரை**

பெருங்கற்காலத்தில் நிலவிய பண்பாட்டு அம்சங்கள் அவற்றின் முதிர்ச்சி நிலையில் தமிழகத்தின் பழமையான இலக்கியமான சங்கஇலக்கியங்களில் பிரதிபலித்திருந்தமையை தெளிவாக கண்டு கொள்ள முடிகின்றது. இவ் பழமையான இலக்கியங்கள் குறிப்பிடும் இறந்தவர் அடக்கமுறை பற்றிய செய்திகள் தொல்லியல் ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னனியில் மட்டுமல்லாது இவ் அடக்க முறைகளுடன் இணைத்து காணப்பட்ட ஏனைய எச்சங்களையும் ஆய்வுக் குட்படுத்துவதன் மூலமாக ஓரளவு உண்மைத்தன்மை வாய்ந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். எனினும் உயிருள்ள அதாவது கரிமச் சேர்க்கைப் பொருட்களால் உருவாக்கப்பட்ட பொருள்கள் பெரும்பாலும் தொல்லியல் ஆய்வுகளில் கிடைப்பதில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இதனால் சங்கால வரலாறு மற்றும் வளமான இலக்கிய மரபு தோற்றம் பெறுவதற்க்கு பெருங்கற்கால பண்பாட்டு மக்களே அத்திவாரம் இட்டுள்ளார்கள் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாகும். எனினும் நாம் இரண்டு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளுக்கு மேலாக தென்னிந்திய,

இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டு காலம் சிறப்புற்றிருந்தமையால் அதன் பண்பாட்டு அம்சங்கள் ஒரே தன்மை கொண்டிருந்தது எனக் கூறமுடியாதென்பதனையும் (பல்வேறு கட்ட வளர்ச்சி) இரண்டவாதாக சங்க இலக்கியப் பாடல்கள் தோற்றம் பெற்ற காலம், தொகுக்கப்பட்ட காலம், அவ் காலப்பின்னனி என்பன தொடர்பாக நிலவும் கருத்து முரண்பாடுகள் என்பவையாகும்.

சங்ககால இலக்கியங்களில் பெருங் கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலான அம்சங்கள் பிரதிபலித்திருக்கும் அதே வேளை அவற்றின் தொடர்ச்சி நிலையிலான வளர்ச்சியினை இற்றை வரை இனங்காண முடிவது சிறப்பான அம்சமாகும். குறிப்பாக தமிழக, இலங்கை தமிழ் மக்களிடையே இன்றும் நிலவுகின்ற கிரியை முறைகள், நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் சமூகப்பண்பாட்டு பழக்கவழக்கங்கள் என்பவற்றின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்கமாக பெருங்கற்காலப் பண்பாடே விளங்குகின்றது. இவற்றினை பின்வரும் உதாரணங்கள் மூலம் காணலாம்.

1. இறந்தவரது ஈமச்சடங்குகள், கிரியை முறைகள், படையல் முறைகள் என்பவற்றின் ஊடான தொடர்ச்சி.

2. இறந்தவர் வழிபாடு, நினைவுக்கற்கள் அமைக்கும் மரபு மற்றும் கிராமிய தெய்வ வழிபாடு

3. வேல், சுவஸ்திகா போன்றனவும் ஏனைய சமய நம்பிக்கைகள்

4. குறியீட்டு மரபு – முத்திரைகள், மோதிரங்கள், பானையோடுகள், கல்வெட்டுக்கள், நாணயங்கள் போன்றவற்றில் காணப்படும் குறியீடுகள் பெருங்கற்கால மக்களின் கருத்தினை தாங்கி நிற்கின்ற எழுத்து வடிவமாகவே காணப்படுவதுடன், அவற்றின் தொடர்ச்சி நிலையிலான வளர்ச்சியினை இன்று வரை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக கிராமப்புறங்களில் இன்றும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் உரிய ஆடைகளை அடையாளம் காணும் பொருட்டு சலவைத்தொழிலாளர்கள் மத்தியில் நிலவுகின்ற குறியீடுகளிலும், மாடுகளில் காணப்படுகின்ற குறியீடுகளிலும் பெருங்கற்கால பண்பாட்டு குறியீடுகளின் தொடர்ச்சியினை இனங்காண முடிகின்றது.


சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் குறியீடுகள்


மாடுகளில் காணப்படும் குறியீடுகள்

**உசாத்துணை நூல்கள்**


1. ராஜன்.கா., 2012. சங்க இலக்கியமும் அகழ்வாய்வும், கொழும்புத் தமிழ்ச் சங்கம், இலங்கை.
2. சிவத்தம்பி.கா..2003.பண்டைத் தமிழ்ச் சமூகம் – வரலாற்றுப் புரிதலை நோக்கி., மக்கள் வெளியீடு சென்னை.
3. சிற்றம்பலம்.சி.க..2002.ஈழத்திற் காணப்படும் சங்க கால முது மக்கள் தாழிகள் – (சங்க இலக்கிய ஆய்வுகள் – கைலாசபதி நினைவுக் கருத்தரங்குக் கட்டுரை), தேசிய கலை இலக்கிய பேரவை.

4. ஜெய்கணேஷ்.பா.,2007,மகாலட்சுமி.ம., மகேஸ்வரி.சு.,"குறிஞ்சி – சங்க இலக்கியம் : வரலாறு – மானிடவியல் - தொல்லியல், பரிசல், சென்னை- 106.

5. சசிவல்லி.வி.சி.,1989,பண்டைத் தமிழர் தொழில்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்., சென்னை.

6. புஸ்பரட்ணம், ப., 2001, தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, குமரன் பதிப்பகம், சென்னை.

7. புஸ்பரட்ணம், ப., 1993, பூநகரித் தொல்பொருளாய்வு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு,திருநெல்வேலி.

8. புஸ்பரட்ணம்.ப., 2004,கிளிநொச்சி மாவட்டத்தின் பூர்விக மக்களும், பண்பாடும் தொல்லியல் வரலாற்று நோக்கு, (கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலங்கள்), மாவட்ட செயலகமும், பண்பாட்டுப் பேரவையும், கிளிநொச்சி.

9. கைலாசபதி.க.,1998,பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,மக்கள் வெளியீடு,சென்னை.

10. ராஜ்கௌதமன், 2006,பாட்டும் தொகையும் தொல்காப்பியமும்தமிழ்ச்சமூக உருவாக்கமும், தமிழினி வெளியீடு சென்னை.

11. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்,1986,தஞ்சைப் பல்கலைக் கழகம்.

12. பிள்ளை,கே.கே.,2000,தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

13. இராகவையங்கர்.ரா, 1951, பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், தமிழ்நாடு அச்சகம், மதுரை.

14. சாமிநாதையர்.உ.வே,1889,பத்துப் பாட்டு மூலமும் நச்சினார்க்கினியார் உரையும், திராவிடரத்னாகர அச்சுக்கூடம்.

15. அகநானூறு, NCBH, 2004, சென்னை.

16. புறநானூறு, NCBH, 2004, சென்னை.